1. சேகர் தனது மோட்டார்சைக்கிளில் ஒரு சனிக்கிழமையன்று 3.4 கி.மீ. தூரமும், ஞாயிற்றுக்கிழமை 4.2 கி.மீ. தூரமும் பயணம் செய்தார் எனில், சனிக்கிழமையை விட ஞாயிற்றுக்கிழமை அவர் எவ்வளவு தூரம் பயணித்தார்?

அ)0.8 கி.மீ. ஆ)1.50 கி.மீ. இ)1.10 கி.மீ. ஈ)0.08 கி.மீ.

2. 21.52 + 2.152 + 0.2152 =

அ)6.456 ஆ)25.106 இ)74.56 ஈ)23.8872

3. 10 அடி மின்கம்பியிலிருந்து, 1.75 அடி மின்கம்பி உபயோகப் படுத்தப்பட்டிருந்தால், மீதமுள்ள கம்பியின் நீளம் என்ன?

அ)8.75 அடி ஆ)8.25 அடி இ)101.75 அடி ஈ)11.75 அடி

4. குமார் ஒரு தோட்டத்திற்கு நீர் பாய்ச்ச ஒரு நாளைக்கு ₹ 11.75 சம்பாதிக்கிறார் எனில், அவர் ஒருவாரம் நீர் பாய்ச்சினால் எவ்வளவு சம்பாதிப்பார்?

அ) ₹ 82.25 ஆ) ₹ 3.525 இ) ₹ 35.25 ஈ) ₹ 16.97

5. ராஜா வாங்கிய தர்பூசணியானது பப்பாளியை விட மூன்று மடங்கு கனமானது. ராஜா வாங்கிய தர்பூசணி 4.2 கி.கி. எடையுள்ளதாக இருந்தால், பப்பாளியின் எடை என்ன?

அ)12.6 கி.கி. ஆ)126 கி.கி. இ)1.4 கி.கி. ஈ)கி.கி.

6. ஒரு குடும்பத்திற்கு நாளொன்றுக்கு 3.25 லி. பால் தேவை எனில், 30 நாட்களுக்கு எவ்வளவு பால் தேவை?

அ)0.975 லி. ஆ)97.5 லி. இ)975 லி. ஈ)9.75 லி.

7. 

இச் செவ்வகத்தின் சுற்றளவு ____.

அ)23.20 செ.மீ. ஆ)22.30 செ.மீ இ)23.30 செ.மீ ஈ)32.4 செ.மீ.

8. 4.37 × 6.95 = ______

அ)32.2404 ஆ)30.2404 இ)322.404 ஈ)30.3715

9. ஒரு குட்டி யானையின் எடை 218.99 கி.கி. இருந்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அதன் எடை 109.85 கி.கி. அதிகரித்தது, எனில் அதன் எடை என்ன?

அ)109.14 கி.கி. ஆ)10.914 கி.கி. இ)3288.4 கி.கி. ஈ)328.84 கி.கி.

10. செல்வன் நான்கு லிட்டர் டீசலுக்கு ₹ 277.88 செலுத்தி உள்ளார் எனில், ஒரு லிட்டர் டீசலின் விலை என்ன?

அ) ₹ 69.50 ஆ) ₹ 69.17 இ) ₹ 69.17 ஈ) ₹ 70.74



LIVEWORKSHEETS